செ.வெ.எண்-69 நாள்-28.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகரத்திற்குட்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1 அரசு கல்லூரி மாணவர் விடுதி, 1 அரசு ஐடிஐ மாணவர் விடுதி, 8 அரசு பள்ளி மாணவர் விடுதி, 6 அரசு பள்ளி மாணவியர் விடுதி என ஆகமொத்தம் 16 விடுதிகள் இயங்கி வருகிறது. இதில் 165 கல்லூரி மாணவர்களும், 50 ஐடிஐ மாணவர்களும், 756 பள்ளி மாணவர்களும், 351 மாணவியர்களும் தங்கி பயின்று வருகின்றனர்.

மேலும், அரியலூர் நகரத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ இயங்கும் மாணவியர் விடுதியில் தரமான உணவுகள் வழங்கப்படுகிறதா என்பதை பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் சரியாக உள்ளதா எனவும், உணவு பொருட்கள் இருப்பு உள்ளதா என்பதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சரளா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**